Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 397/**2021**
**Depostitions of PW- Witness for**

| | |
|---|---|
| Name | டாக்டர். திரு. சுப்பிரமணியன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of October 2023

Signature of Witness.

12.10.2023

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் மேற்கு இருப்பு திருவண்ணாமலை கால்நடை மருத்துகத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 06.03.2014 ம் தேதி நான் மம்சாபுரம் கால்நடை மருந்தகத்தில் கால் நடை உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் மின்வேலியில் சிக்கி காட்டு ஆண் யானை ஒன்று இறந்துவிட்டதாக வனச்சரக அலுவலர் பாண்டியராஜ் அவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். 07.03.2014 அன்று மதியம் 3.00 மணியளவில் இறந்து கிடந்த ஆண் காட்டு யானை இருந்த இடத்திற்கு சென்று

யானையை பிரேதபரிசோதனை செய்தேன். இறந்தகாட்டு யானையை ஆய்வு செய்தபின்னர் மின் பாய்ந்த மின் கம்பியில் இரண்டு முன்னங்கால்கள் சிக்கிஇருந்தது. அதனால் மேற்படி இறந்த யானைக்கு மூன்று இடங்களில் காயம் இருந்தது. அது 1. நெஞ்சுப்பகுதி நீளம்.13.5 செ.மீ. விட்டம் 7.5 செ.மீ. அகலம் 1.5 செ.மீ. மற்றும் 2. வலது முன்னங்கால் பாதத்திற்கு மேல் காயம் இருந்தது அதன் நீளம் 15. செ.மீ, அகலம் 2.5 செ.மீ, ஆழம் 2. செ.மீ, இடது தோள்பட்டையில் நீளம் 4.5 செ.மீ அகலம் 5 செ.மீ ஆழம் 2. செ.மீ இந்த காயம்பட்ட பகுதியில் தோல் எறிந்த நிலையில் இருந்தது. அதை சுற்றலும் இரத்த காயம் இருந்தது. இதய அறையில் இரத்தம் உறையாத நிலையில் இருந்தது. மற்ற உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் மிகுந்த இரத்த செறிவுடன் இருந்தது. பிரேத பரிசோதனை முடித்து அதே இடத்தில் மேற்படி இறந்த யானை புதைக்கப்பட்டது. யானையின் தந்தம் வலது தந்தத்தின் அளவு 48 செ.மீ, இடது தந்தத்தின் அளவு 54 செ.மீ ஆகியவற்றை வனத்துறை அலுவலரிடம் ஒப்படைக்கபட்டப்பட்டது. மேற்படி யானையின் வால் பகுதியில் முடி முழுவதும் தீயினால் எறித்து அழிக்கப்பட்டது. 07.03.2014 ம்தேதி இறந்த ஆண் யானையின் பிரேத பரிசோதனை செய்து வனத்துறை அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இது சம்மந்தமாக வனத்துறை அலுவலர் என்னை விசாரித்தார். என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் யானையைத்தான் நான் பார்வையிட்டு பிரேத கூராய்வு செய்தேன். ஆனால் மேற்படி புகைப்படம் வனத்துறை அலுவலரால் எடுக்கப்பட்டது ஆகும். நான் எடுத்த புகைப்படங்கள் தனியாக உள்ளது. **(யானையின் பிரேத கூராய்வு அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகவும், மேற்படி அறிக்கையை வனச்சரகர் அலுவலகத்தில் கொடுத்த கடிதம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. )**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.